# விபுலானந்தர் பாவியம்

ஆக்கியோன்

கவிஞர். செ. குணரெத்தினம்



நிழல் வெளியீடு - கனடா

மட்டக்களப்பு
விபுலானந்தர் நூற்றுண்டு நினைவு விழா
சபையாரின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்தர் பாவியம்

---------------

ஆக்கியோன்;

கவிஞர் செ. குணரெத்தினம்

பதிப்பாசிரியர்;
எட்வேட் சந்திரா
நிழல் ஆசிரியர்
--0--

*மட்டக்களப்பு*
*சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு நினைவு விழாச் சபையினரின் ஆதரவில்*
*கனடா - தொரன்ரோ றிப்ளக்ஸ் அச்சகத்தாரின் அன்பளிப்பு வெளியீடு*

---

இது ஒரு நிழல் வெளியீடு - கனடா

---


## ஜீவா பதிப்பகம்
இலங்கை கனடா

**REFLEX PRINTING**
**1108 Bay Street**
**Toronto ONT Canada M5S 2W9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302.381

## பதிப்புத் தகவல்கள்

# விபுலானநத்தர் பாவியம்

ஆசிரியர்:

இலக்கியமணி கவிஞர். செ.குணரெத்தினம்
(3ம் குறுக்குத் தெரு அமிர்தகழி. மட்டக்களப்பு)

1. வெளியீடு.: நிழல் - கனடா
2. வெளியீட்டு இலக்கம்: இலங்கை: 136 கனடா::50
3. பதிப்பாசிரியர்: எட்வேட் இதயச்சந்திரா
4. குறிப்பு: ( மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றுண்டு நினைவுவிழாச் சபையினரின் ஆதரவில் கனடா தொரன்ரோ றிப்ளக்ஸ் அச்சகத்தாரின் அன்பளிப்பு )
5. பக்கங்கள்: VIII+ 24
7. புத்தக அளவு: டிமை எட்டிலொன்று
8. பதிப்புத் தினம்.: 1.8.1991
9. நூற்பகுதி: பாவியம்
10: நூற்தொகுதி: பெரியார் வரலாறு
11. அச்சமைப்பு: மின்கணனித் தமிழ்.
12. தயாரிப்பாளர்கள்: ஜோர்ஜ், உவெஸ்லி, அல்பேட்,பென்ஜமின், ஆணல்ட் (இதயம் சகோதரர்கள்)
13. விலை: கனடிய டாலர் 5.00
14. வியாபார விசாரணைக்கு:

REFLEX PRINTING
1108 BAY STREEt
TORONTO
ONT - Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு கூர்கின்றோம்;

அடிகளாரின் வரலாற்றையும் அவரின் கட்டுரைகள் கவிதைகள்
கொண்ட பல தொகுதிகளையும் தமிழகத்தின் பல பிரசித்திபெற்ற
பதிப்பகங்களில் அச்சிட்டு அச்சுருவிற் கொணர்ந்த
ஈழத்து மட்டக்களப்பு குறுமண்வெளி

**அமரர் அருட் செல்வநாயகம்**

அவர்களும்

அடிகளார் படிவ மலர் மூலம்
விபுலானந்தரின் வரலாற்றுக் குறிப்புகளைத்
திரட்டித் தந்த காரைதீவு

**அமரர் ம.சற்குணம் M.A. அவர்களும்**

அடிகளாரின் வரலாற்றை எவ்வித மாறுபாடுமின்றி
பிற்சந்ததியினர் அறியத்தக்கதாக
நூலுருவாக்கித் தந்தமைக்காக

உள்ளங் கனிந்து உவகைகொண்டு நினைவு கூர்கிறோம்.

...............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபுலானந்தர் பாவியத்தின்

படைப்பாளி



இலக்கியமணி

## கவிஞர். செ. குணரெத்தினம்.

இவர் ஈழத்தின் பிரபலியமான கவிஞன், எழுத்தாளன், ஆய்வாளன். படைப்பாளி, நாவலாசிரியன் என்ற எல்லா நிலையிலும் வீறுநடை போடுபவர். தமிழகத்திலும் ஈழத்திலும் இருந்துவரும் மாத, வார இதழ்களில் இவரது படைப்புகள் வாசகர்களுக்கு தமிழமுதை அள்ளி வழங்குவன. பல மதச் சஞ்சிகைளிலும் இவரது படைப்புகள் வெளி வந்துள்ளமை இவரது சமரச சன்மார்க்கப் போக்கினை எடுத்துக் காட்டும்.

தெய்வ தரிசனம் என்ற நவீனத்தையும் நெஞ்சில் ஒரு மலர், காவடிச் சிந்து என்ற இரு கவிதை நூல்களையும் நூலுருவிற் கண்டவர். பல போட்டிகளிற் பரிசு ஈட்டியவர். மட்டக்களப்புக் கலாச்சாரப் பேரவையின் இலக்கிய மணி விருதைப் பெற்றவர்.

கிழக்கு ஈழம் மட்டக்களப்பு மாநிலத்தில் உள்ள அமிர்தகழி எனும் இடத்தில் வாழும் இவர் ஒரு பிறவிக் கவிஞர். பல நூற்றுக் கணக்கான கவிதைகளைப் படைத்தவர். பிரதேச வழக்குகளுக்குஞ் சொற்களுக்கும் இலக்கிய வழக்குக் கொடுத்து தமிழ் வளர்ச்சி செய்பவர்

-- பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் உரை.

சுவாமி விபுலானந்த அடிகளார் அவதரித்த மட்டக்களப்பின் மண்ணின் மைந்தர்கள் நாம், என்று சொல்வதில் பெருமைப்படும் நாங்கள் தேற்றாத்தீவினர்.

கடல்கடந்து கனடாவில் குடியேறி விட்டாலும் எங்கள் தாயகம், தாய்மொழி, தமிழினம் என்னும் பற்றுகளில் ஓரணுவாவது பிசகாது இங்கு தமிழ்ப்பணி செய்து வருகின்றோம்.

இங்கு பல சாதனைகளை நிலைநாட்டியுள்ள நாங்கள் அவற்றை எடுத்து உங்களுக்குக் கூறுவதிற் பெருமித மடைகின்றோம். முதலாவது மின்கணனியிற் தமிழ் எழுத்துக்களை அச்சமைப்புச் செய்து பெத்தலேகம் கலம்பகம் என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டதின் மூலம் இத்துறையில் நாங்களே உலகத்தின் முன்னோடிகள் என்ற பெயரை அடைந்துள்ளோம்.

இரண்டாவது கடடல்கடந்து மேற்கு நாடுகளில் தமிழில் அச்சிடக் கூடிய ஒரு அச்சகத்தைக் கனடாவில் ஆரம்பித்ததின் மூலம் இத்துறையிலும் முதற்காலடி எடுத்து வைத்த பெருமை எங்களுடையதே.

மூன்றாவது எங்கள் பிறந்த மண்ணின் பெயரை உலகெங்கும் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகங்கள், தமிழ் நூலகங்கள் பேரறிஞர்கள் என்னும் ஊடகங்களுக்கூடாக அறியத் தரும்வகையில் பல வெளியீடுகளையும் தரமான இலக்கியப் படைப்புகளையும் வெளியிட்டு விநியோகித்துள்ளோம். இதன்மூலம் தமிழ் பேசும் தரமான மக்கள் ஈழத்தின் மட்டக்களப்பிலும் வசிக்கிறார்கள் என்ற ஒரு செய்தியைப் பரப்பியுள்ளோம்.

எங்கள் மண்ணில் எப்போது காலடி எடுத்து வைத்து அதிற் புரளுவோம் என ஏங்கும் நாங்கள் அங்குள்ள எம்மினத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் நண்பர்களையும் மறந்துவிடவில்லை இடையில் உள்ள பல தடைகள் இடர் செய்தாலும் எங்கள் நூல் வெளியீடுகள் மூலம் அம்மண்ணின் ஆற்றலை எடுத்து வெளிக்காட்டி வருகின்றோம்.

அத்துடன் விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டு நினைவுப் பணியில் தேற்றாத்தீவு முன்னாள் மனோகரா அச்சகப் பிரதிபலிப்பாக விளங்கும் கனடா தொரன்ரோ றிப்ளக்ஸ் , அச்சகத்தாராகிய எங்களின் பங்களிப்புகள். பின்வருமாறு என்பதையும் அட்டவணை யிட்டுக் காட்டுவதில் மகிழ்வுறுகிறோம்.

## இலங்கையில்:-

1. சுவாமி விபுலானந்த அடிகளாரின் பாலிய இலக்கிய நண்பன் வித்துவான் அ. சரவணமுத்தன் அவர்களின் ஸ்ரீ மாமாங்க விநா யகர் பதிகத்தை உரையுடன் மீளப்பதிப்பிக்கின்றோம்.

2. எங்கள் தந்தையாரின் இல்ல நூலகமாக இருந்த பல்லாயிரக் கணக்கான பண்டைத் தமிழ் நூல்களை அன்பளிப்புச் செய்து தேற்றாத்தீவில் உள்ள எங்கள் இல்லத்தில் விபுலானந்தர் நினைவு ஆய்வு நூலகத்தை அமைத்துள்ளோம்.

3. கவிஞர். செ. குணரெத்தினம் அவர்கள் படைத்த விபுலானந்தர் பாவியத்தை வெளியிடுகிறோம்.

**கனடாவில்:**

1. விபுலானந்தர் பிள்ளைத் தமிழ் எனும் பிரபந்த நூலை உரையுடன் பதிப்பித்து தொரன்ரோ தமிழ் முருகன் கோவில் சபை அறங் காவல் குழு சபையினர் 20.7.1991ந் தினத்தன்று நடாத்தும் விபுலானந்தரின் நூற்றாண்டு நினைவு விழாவின் நினைவு மலராக வெளியிட்டுள்ளோம்.

இதுவரை எங்கள் ஜீவா பதிப்பகம் எனும் தாபனத்தின் மூலம் மட்டக்களப்பு மாநிலத்தின் மாண்பும் மரபுந் தவழும் பின்வரும் நூல்களை வெளியிட்டு இவற்றை உலகின் பலபகுதிகளிலும் சென்று சேறத்தக்கதாக முயற்சி எடுத்து வெற்றி கண்டுள்ளோம்.

1. நீரரர் நிகண்டு
2. மட்டக்களப்பு மாநில உபகதைகள்
3. மட்டக்களப்புச் சொல்வெட்டு
4. மட்டக்களப்பு சொல்நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மட்டக்களப்பு மகிழ்வுப் புதையல்கள்.
6. மட்டக்களப்பு மாநிலப் பணையோலைச் சுவடிகள்
7. மட்டக்களப்புச் சொல்லகராதி
8. மட்டக்களப்பு மாநிலப் பழமொழி அகரவரிசை
9. ஒருவடமோடி நாடகம் அரங்கேறுகிறது.
10. முன்பிறந்த தென்மோடி நாடகம் என்னும்

**மட்டக்களப்பு மரபு தமிழியல் நூல்களையும்,**

**11. மட்டக்களப்புப் பெரியார்கள் வரலாறு**

1. இரும்பரசன்
2. விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்
3. எஸ். யூ.இ.
4. புலவர் மணிக்கோவை
5. பிசாசின் புத்திரர்கள்
6. சீவபுராணம்
7. ஈழத்து இரட்டையர்கள்
8. விபுலானந்தர் பாவியம்

**12 மட்டக்களப்பு தமிழ் இலக்கிய நூல்களும் உரையும்**

1. சீமந்தனி புராணம்
2. கணபதிப்பிள்ளைப் புலவர் நூற்திரட்டு 1.
3. கபோத காதை
4. இரண்ய சம்கார அம்மானை
5. மாமாங்கம் ஸ்ரீ விநாயகர் பதிகம்.

இப்போது மட்டக்களப்பு அமிர்கழி.யில் வாழும் கவிஞரும் இலக்கியமணியுமான செ. குணரெத்தினம் அவர்களின் விபுலானந்தர் பாவியம் என்னும் நூலை வெளியிடுகின்றோம். இந்த நூலின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதென்றால் அதிக பக்கங்கள் எடுக்கும். எனவே சுருக்கமாகக் கூறுகிறோம்.

நமது காலத்தில் வாழ்ந்து நல்லவை செய்த எத்தனையோ நம்நாட்டுப் பெரியவர்களை நாம் இன்று மறந்துவிட்டோம். இனி மேல் வரும் தலைமுறைகளுக்கு அவர்கள் ஒரு கட்டுக்கதையின் கதாநாயகன் என்ற நிலையிலேதான் தென்படுவார்கள். எனவே இந்த இழிநிலையைத் தடுக்க நினைவு விழாக்கள் எடுப்பதால் அவ்வளவு பலன் ஏற்பட்டுவிடாது. ஆனால் அவர்களின் வரலாற்றைப் பாட சாலைகளிற் சொல்லிக் கொடுப்பதாலும் மற்றவர்கள் கற்று அறியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க இலகுவான நூல்களை எழுதி வெளியிடுவதாலுமே அந்த நோக்கை அடையலாம்.

இத்துறையில் இந்த விபுலானந்தர் பாவியம் தற்போதுள்ள சந்ததியினருக்கு மட்டுமல்ல வருங்காலச் சந்ததியினருக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கும். அதற்கேற்ப இலகு தமிழில் இசைநடை மிக்க செய்யுளில் பாலர்களும் ஓரளவு கல்வி அறிவுள்ளவர்களும் கற்றுத் தெளியத்தக்கதாக இந்த நூலைப் படைத்துள்ளார். சும்மா - வாழாவிருத்தல், சோட்டை - விருப்பம், என்பதுபோன்ற பிரதேசச் சொற்களை இலக்கிய வழக்கிற்கு இழுத்து ஒரு புதுமை படைத்துள்ளார்.

இதனைப் பாடசாலை மாணவர்கள் மாத்திரமல்ல மற்றவர் களும் கற்க வேண்டும். நம் தேனாட்டிற்குப் பெருமை தேடித்தந்த சுவாமி விபுலானந்த அடிகளாரையிட்டு அறிய வேண்டும் அவரின் மாட்சியில் திளைத்துப் இறும்பூதெய்த வேண்டும். இளஞ் சந்ததியினர் அவரின் சுவட்டிற் காலடி எடுத்து வைத்து செயற்கரிய செய்ய வேண்டும் என்ற விழைவுடன் இந்த நூலை வெளியிடுகிறோம். அதுவும் அடிகளாரின் நூற்றாண்டு நினைவு விழாக் கால கட்டத்தில் அவரது பிறந்த மண்ணில் நடைபெறும் மட்டக்களப்பு விபுலானந்தர் நூற்றாண்டு நினைவு விழாச் சபையினரின் ஆதரவில் இதனை வெளியிடுவதில் மிகவும் மகிழ்வடைகின்றோம்.

இந்தப் பாவியத்தைப் படைத்து அதனை வெளியிடும் உரிமையை நல்கிய கவிஞர் அவர்களுக்கும் இதற்கான ஈடுபாடு களில் பங்கேற்ற அன்புமணி. இரா. நாகலிங்கம் அவர்களுக்கும். மட்டக்களப்பு விபுலானந்தர் நினைவுப் பணி மன்றத்தினருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகுக.

**இவ்வண்ணம்**
**எட்வேட் இதயச்சந்திரா**

*கனடா 31.7.91.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

(எண்கள் பக்கங்களைக் குறிப்பன)


| | |
|---|---|
| கவிஞரின் உரை | 1 |
| வணக்கம் | 1 |
| பிறந்த மண் | 2 |
| பிறப்பு | 2 |
| குழந்தைப் பராயம் | 3 |
| ஆரம்பக் கல்வி பயிலல் | 3 |
| இளமையிலே கவிதை இயற்றும் ஆற்றல் | 4 |
| ஆங்கிலமொழி அரம்ப அறிவு | 4 |
| கிறிஸ்தவ மத அறிவு பெறல் | 5 |
| மட்டககளப்பில் ஆசிரிய பதவி | 5 |
| அன்னையாரை இழந்தார் | 5 |
| கல்முனையில் ஆசிரிய பணி | 5 |
| ஆசிரியப் பயிற்சி | 6 |
| தாய்மொழித் தமிழாய்வில் நாட்டம் | 6 |
| சமய ஆராய்ச்சி தமிழ் அறிவு பெறல் | 6 |
| விஞ்ஞான வித்துவான் | 7 |
| சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழிற் தந்தார் | 7 |
| தாய்மொழிமீதுகொண்ட பற்று | 7 |
| ஆங்கில வாணியை அழகு தமிழிற் தந்தார் | 8 |
| வாழ்வில் ஒரு திருப்பம் | 8 |
| சர்வானந்தரின் வழிகாட்டுதல் | 8 |
| இராமக் கிருஷ்ணமிசன் பிரவேசம் | 9 |
| சம்பந்திசிரியார் கல்லூரியில் விரிவுரையாளரானார் | 9 |
| விஞ்ஞானக் கலைமாணிப் பட்டம் | 9 |
| இந்துக் கல்லூரி அதிபரானார் | 9 |
| ஆரிய திராவிட பாசாவிருத்திச் சங்கம் | 10 |
| தமிழ்ப் பண்டிதர்கள் உருவாகினர் | 10 |
| வாழ்க்கையில் மாறுதல் | 11 |
| துறவு நிலை | 11 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்வாகனனுர் பிரபோதசைன்யப் பெயர்பூண்டார் 12
டாக்டர். உ.வே.சாமிநாத ஐயருடன் உறவு 12
பத்திரிகை ஆசிரியப்பணி 12
யோகி சுத்தானந்த பாரதியார் நட்பு 13
மதுரைச் சங்கப் பரீட்சகராஞர் 13
தமிழியல் வானின் தாரகையானுர் 13
விபுலானந்த அடிகளானுர் 14
அடிகளார் இந்தியாவிலிருந்து வருதல் 14
இலங்கையிற் கல்வித் தொண்டு 15
ஈழத்துக் கிழக்கில் கல்வியகங்களை அமைத்தார் 15
கல்கத்தா இராமக்கிருஷ்ணமிசன் மாநாட்டு மதிப்பு 16
அநாதை மாணவர்களுக்கு ஆதரவீந்தார் 16
ஆங்கிலக் கல்வி கற்க வசதி செய்தார் 16
அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தோற்றத்தில் பங்கு 16
காந்தியடிகளை வரவேற்ருர் 17
தமிழ்ப் புலவர் வகுப்புகள் 17
சமய சமரச சொற்பொழிவுகள் 17
அண்ணுமலைப் பல்கலைக் கழக அழைப்பு 17
முதற் தமிழ்ப் பேராசான் 18
தீண்டாமை போக்கித் திகழ்ந்தார் 18
இசையாராய்ச்சி 18
உள்ள ஆறுதற்காய் பேராசிரியர் பதவி ஓய்வு 19
தமிழ்த் தாய்க்கு யாழ்நூல் தந்தார் 19
பத்திரிகையாசிரியப் பணி செய்தார் 19
இமய மலைச் சாரலில் பிரபுத்த பாரத ஆசிரியர் 20
பிரபுத்த பாரத இதழிற் தமிழமுது அளித்தார் 20
வடநாடிருந்து தென்னகம் வந்து சேர்தல் 20
இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் 21
யாழ்நூல் அரங்கேற்றம் 21
திரிக்கொள்ளம்புத்தூரில் திருவிழா 21
விஞ்ஞானத் தமிழ்க் கலைச் சொற்கள் 22
மதங்க சூளாமணி - நாடகத் தமிழ்க் குறை போக்கினுர் 22
நோய்கொண்டார் 23
விபுலானந்த அடிகளார் அரனடி சேர்ந்தார் 23
ஆருத் தயரம் அலைமோதிற்று 23
நிறைவு 23

*******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கீழம் மட்டக்களப்பு
கவிஞர்
செ. குணரெத்தினம் அவர்கள் யாத்த

# விபுலானந்தர் பாவியம்.

------280791 திங் இர1000 ----

கவிஞரின் உரை.

பல்விழுந்த பாட்டிகதை
பாலகர்க்கு நிலவொளியில்
சொல்விழுந்து கூத்தாடச்
சொல்வதுபோல் முத்தமிழின்

வித்தகராய் விளங்கியநம்
விபுலானந் தர்கதையை
சித்தம் மகிழ்வதற்குச்
செப்ப முயல்கின்றேன்.

குற்றங் குறையிருக்கும்
கூட்டற் கழிப்பிருக்கும்
கற்றவர்கள் மன்னித்தென்
கதைபடிக்க வேண்டுகின்றேன்.

வணக்கம்.

தடையின்றிக் குதித்தோடும்
தளராத நதிபோல
படைப்பதற்கிப் பாவியத்தின்
பாடல்களைப் பாடவருள்

கிடைப்பதற்கு வரந்தருக
கிள்ளைத்தமிழ் சரஸ்வதியே
அடைக்கலமா யுன்பாதத்
தாசிர்தனை வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த மண்.

கிழக்குவான் திரைகிழித்து
கீழிறங்கித் தன்னொளியை
வழங்குவான் செங்கதிரோன்.
வயலெல்லாம் பொன்னிறமாய்
துலங்கிடுமே அரிவையர்கள்
துயில்நீங்கி ஆதவனை
நலங்கள்தர வேண்டுகையில்
ஞாலமது ஒளிபெறுமே.

காகங்கள் கரையு மெங்கும்
கழனியிலே கவிகள் கேட்கும்
சோகங்கள் குறைந்தநற்
சுகமான கால மந்நாள்
தாகங்கள் நீங்கிப் பூமி
தலையில்நெற் கதிர்கள் சூட
போகங்கள் இரண்டு வயல்
பொலிறுற்றுப் பொங்கிடுமே.

மருதமும் நெய்தல் மண்ணும்
மனமொத்து வதுவை செய்து
அருமருந்தாய்ப் பெற்றெடுத்த
அழகுதமிழ்க் குடிகள் வாழும்
பெருமைபெறு கண்ணகி கோட்டப்
பேரூராம் காரை தீவின்
அருமைதனைப் பாடுதற்கு
ஆயிரமாங் கவிஞர் வேண்டும்.

பிறப்பு. (27.03.1892)

கல்முனையின் தென்திசையில்
கல்நான்கு தொலைவிலுள்ள
நல்லூராங் காரைதீவில்
நற்பண்பு மேவிடநல்
இல்லறத்தில் இறைகண்ட
இனியமகள் கண்ணம்மையும்
சொல்பிறழா நல்லவுள்ளச்
சுடர்சாமித் தம்பியரும்
பல்கலையில் வல்லவனைப்
பரிணமிக்கப் போகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன்தனைப் பெற்றெடுத்துச்
சீராட்டி அகமகிழ்ந்தார்.

குழந்தைப் பராயம்.

மயில்வாகனம் தவழ்ந்து
மழலைத் தேன்சொரிந்து
வயிரமணி யெனவளர்ந்து
வையகத்துக் கொளி கொடுத்தான்.

ஐயா வாவென்றழைத்தால்
அம்மா வென்றோடிவந்து
மெய்வருத்தந் தீருதற்கு
மெத்தென்று கண்ணம்மையின்
கைமேலும் கால்மேலும்
களித்துருண்டு பாய்ந்திடுவான்.

மூத்தமகன் என்பதாலும்
மூக்குவிழி தந்தைதாயைப்
பார்ப்பதுபோல் இருந்ததாலும்
படிப்பதனிற் கரிசனையாய்
ஆர்வமுடன் திகழ்ந்ததாலும்
அவனோடு தந்தைதாயார்
ஊரவரும் மிகுந்தபாசம்
உள்ளத்தில் வைத்திருந்தார்.

பிற்காலம் பெற்றவரின்
பெயரோடு பிறந்தமண்ணின்
நற்பெயரும் இவனாலே
நாநிலத்தில் நிலைக்குமென்று
பெற்றவர்கள் எண்ணினரா
பெரியவனாய் இவன்வளர்ந்து
கற்றறிவு பெற்றுலகில்
காலத்தால் அழிந்திடாத
அற்புதமாய் வாழ்வானென்று
யாருமே அறிந்தாரோ.

ஆரம்பக் கல்வி பயிலல்.

குஞ்சித்தம்பி என்பார்
குருவானார் முதன்முதலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஞ்சுமுகம் பார்த்து
பெற்றவர்கள் மனங்களித்து
நெஞ்சம் நிறைவுபெற்றார்.
நிறைவான கல்விதனை
அஞ்சாமற் பயின்றவனை
அவன்தந்தை மாமன்மாரும்
கொஞ்சம் படிப்பித்த
குருவாகிப் புகழடைந்தார்.

இளமையிலே கவிதை இயற்றும் ஆற்றல்.

சின்னவயதினிலே
செந்தமிழ்க் கவியாக்கும்
தன்மைதனைக் கொண்டிருந்த
தம்பிமயில் வாகனனார்
அந்நாளில் ஆனைமுகன்
ஆலயத்திற் பூசைசெய்து
பின்னாளிற் காரைதீவில்
பெரியனும் வைத்திலிங்க
மென்பாரின் உதவியுடன்
இலக்கணத்து நன்நூலும்
தென்தமிழ் நிகண்டுடனே
தேனொத்த பாரதமும்
கந்தப் புராணமதும்
கம்ப ராமாயணமும்
கற்றார் வடமொழியும்
கண்ணென்ற தமிழுடனே.

இந்த அறிவைவைத்தே
இவரது முதற்குருவாம்
குஞ்சித் தம்பியர்மேல்
குருவாழ்த்துப் பாடல்செய்தார்.

ஆங்கிலமொழி ஆரம்ப அறிவு.

வீட்டில் இருந்துகொண்டே
வித்தாக ஆங்கிலமும்
கற்றறிந்து கொண்டபின்னர்
கல்முனையிற் கல்விகற்கப்
பற்றுற்று வந்தடைந்து
பயின்றுதிறல் கொண்டனரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மத அறிவு பெறல்.

கல்முனையில் மெதடிஸ்த
கல்லூரியிற் சேர்ந்தங்கே
கல்விகற்கும் வேளையிலே
கனம்மயில் வாகனர்க்கு
கிறித்தவத்தில் ஈடுபாடும்
கிட்டியது. அதன்பயனய்
அறிவுதனைவளர்த்தாகமத்
தடிகளாய் மேன்மையுற்றார்.

மட்டக்களப்பில் ஆசிரியர் பதவி.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
ஆறுவதாம் ஆண்டினிலே
தூய கிறித்தவமாய்த்
துலங்கிய அர்ச்மிக்கேல்
பாடசாலையிற் சேர்ந்து
பயின்றார். அதன்பின்பு
நாடறிய கேம்பிறிச்
நடாத்திய பரீட்சையிலே
தேறிய பயனதனால்
திறமைமயில் வாகனனார்
மாறினார் ஆசானாய்
மைக்கல் கல்லூரியில்.

அன்னையாரை இழந்தார்.

ஆனாலும் இவருடைய
அன்னை கண்ணம்மையார்
போனதினால் இறைவனிடம்
பொங்குதுயர் மிகக்கொண்டு
கல்முனைபோய் தாயிறந்த
கவலைகளைமறந்துவிட,

கல்முனையில் ஆசிரியப் பணி.

நல்லமிசன் கத்தோலிக்கர்
நடத்துமிசன் பள்ளியிலே
ஆசானாய்ப் பணியாற்றி
ஆறுதலைப் பெற்றதுண்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப் பயிற்சி.

ஆயிரத்துத் தொழாயிரத்து
பதினொன்றும் ஆண்டதனில்
ஆசிரியப் பயிற்சிபெறும்
ஆசாற்காம் கலாசாலைப்
பிரவேசப் பரீட்சையிலே
பெருஞ்சித்தி பெற்றபின்பு
தரமிகுந்த சாதனைகள்
தான்புரிந்தே தகைசிறந்தார்.

தாய்மொழித் தமிழாய்வில் நாட்டம்.

இனியதமிழ் மொழியதனில்
இயல்பறிந்து இன்பமுற
நனிதுள்ளம் நாட்டமுற்று
நவையறவே கற்றுணர
ஆய்ந்தறிய வேண்டுமென்ற
ஆர்வமதால் ஊக்கமுற்று
தோய்ந்தார் தமிழ்க்கடலில்
துருவினர் தொகைநூல்கள்.

சமய ஆராய்ச்சியும்
தமிழ் இலக்கண இலக்கியஅறிவும் பெறுதல்.

சைவத்தின் நுணுக்கம்
சார்மதங்கள் பலவற்றின்
கைவல்லியம் ஆதியன
கற்றறிய அவாக்கொண்ட
மயில்வாகனருக்கு
மதுரைத்தமிழ் சங்கமதின்
குயில்களில் ஒரு குயிலாய்
கூவுதமிழ் வித்துவான்கள்
தாமோதரம் பிள்ளை
தமிழண்ணல் கோப்பாயின்
கந்தையா என்பவர்கள்
கைதூக்கித் தோழ்கொடுக்க
விந்தைத்தமிழ் நல்லறிவு
விரிவாகி விளங்கினரே
வித்தகத்தின் முத்தமிழின்
வியப்பினிமேலே மயங்கினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான வித்துவான்.

முயற்சிதனைக் கைக்கொண்டு
முத்தமிழைக் கற்கண்டாய்
அயர்ச்சியின்றிக் கற்றறிந்து
ஆற்றல்மிகு மயில்வாகனர்
பயிற்சிபெற்ற ஆசானைப்
பரிணமித்து வரும்வேளை
உயர்ச்சிபெற மென்மேலும்
உயர்கல்வி பயிலலுற்றார்.

பொறியியற் கடல்தனிலே
புகுந்தவர் விஞ்ஞான
நெறிகற்று வித்துவத்தின்
நிகரிலா விருதுபெற்றார்.

சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழிற் தந்தார்.

செறிதமிழில் சேக்ஸ்பியரின்
செகம்புகழும் நாடகங்கள்
அறிவுதனை ஆங்கிலத்தின்
அடியிருந்து ஆக்கமிட்டார்.
விஞ்ஞானக் கல்வியிலே
மேதையாய் இருந்தாலும்
மெஞ்ஞான அறிவூட்டும்
மேலான பனுவல்களும்
கலைஞான நுட்பங்களும்
கனிரசமாய் நுகர்ந்திருந்தார்.
இத்தனை இலக்கியத்தில்
இன்புற்றுத் திளைத்தாலும்
வித்தகராய் விஞ்ஞான
வினைக்கல்வி தனிற்தேறி
வாங்கினார் டிப்ளோமா
வாழ்த்தினாள் தமிழ்மாதா.
ஓங்கிப் புகழ்படைத்து
உலகேற்றும் புகழ்கொண்டார்.

தாய் மொழிமீதுகொண்ட பற்று.

விஞ்ஞானப் பட்டம்பெற்ற
வித்தகர் விபுலானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்ஞான்றும் இன்தமிழை
எதிர்வீடாய் நினைத்ததில்லை.
தன்ஞானத்துடன் மதுரைத்
தமிழ்ச்சங்கப் பரீட்சையிலே
முன்னின்று சித்திபெற்ற
முதலிலங்கைத் தமிழனானார்.

ஆங்கில வாணியை அழகு தமிழிற் தந்தார்.

பலமொழி கற்றுநல்ல
பண்டிதர் ஆனதினால்
அழகான ஆங்கிலத்து
அற்புதப் படைப்புகளை
வளமான செந்தமிழில்
வடித்து மொழிபெயர்த்து
உலகெலாம் புகழ்படைத்த
ஒப்பற்ற ஞானியானார்.

வாழ்வில் ஒரு திருப்பம்.

மதுரைத் தமிழ்ச் சங்கப்
பண்டிதர் தேர்வினிலே
மயில்வாகனன் தேறி
மாட்சியுற்ற வேளையிலே
எதிர்கொண்டு ஸ்ரீராம
கிருஷ்ண மிசன்துறவி
எண்திசையும் புகழ்பெற்ற,

சர்வானந்தரின் வழிகாட்டுதல்.

ஏற்றமிகு சர்வானந்தரவர்
புதிய திருப்பத்தைப்
புகுத்திடவே மயில்வாகனர்
பூமனதில் விதையூன்றப்
பொலிந்திட்டார் கொழும்பினிலே.

அதனால்:
அதிலிருந்தே இவர்மனதில்
ஆற்மீக உணர்வெழுந்து
ஆட்கொண்டு அவர்மேலே
அன்புதனைச் சொரிந்ததுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ இராமகிருஷ்ணமிசன் பிரவேசம்.

ஞானக் குருவுறவை நாடி யலைந்தமயில்
வாகனர்க்கு ஏற்ற வாய்ப்பாகப் போயிற்று
ஞானச் சுடரொளியாய் நற்குரு சர்வானந்தர்
காட்சி கொடுத்தருளக் கருணைமிகக் கொண்டு
இராம கிருஷ்ணமிசன் இயற்றும் பணியறிந்து
தாமும் அதனோடு தான்சேர்ந்து சேவைசெய்ய
ஆவலுற்று மனந்துணிந்த அடியனாய் மனம்மாறி
தாவலுற்றுத் தன்வாழ்வின்
தகையெல்லாம் அர்ப்பணித்தார்.

## சம்பந்திசிரியார் கல்லூரியில் விருவுரையாளனானர்.

அரசினர் பொறியியல்
அறிவகக் கல்லூரியில்
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
பதினேழாம் ஆண்டதிலே
இரசாயன வியல்சொல்லும்
இணையாசா னாகியவர்
இலங்கியபின் யாழ்நகரின்
ஈடற்ற சம்பத்திரிசியார்
நலங்கொள்ளும் கல்லூரியில்
நல்விரி வுரையாளனாய்த்
துலங்கினார் மூன்றாண்டு
தொடர்ந்தங்கு பணிசெய்தார்.

## விஞ்ஞானக் கலைமாணிப் பட்டம்.

அங்கிருந்தே ஆசான்பணி ஆற்றிவரும் வேளை
அறிஞர்களின் அன்புறவால் அவரறிவு மேவ
லண்டன்பல் கலைக்கழகம்
நடாத்திய பரீட்சையிலே
லாவகமாய்ப் பிஸ்சியென் நற்பட்டம் பெற்றார்.

## இந்துக் கல்லூரி அதிபரானார்.

இத்தோடு விடவில்லை
எழில்மானிப் பாய்மண்ணின்
இந்துக் கல்லூரியை
இயக்குகின்ற நற்சபையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுணர்ர்ந்து தமிழோடு
உறவாடும் ஆங்கிலத்திற்
கற்றுணர்ந்த பேராசான்
கவின்மயில் வாகனர்க்கு

இந்துக் கல்லூரியின்
இணையற்ற பொறுப்பை
ஏற்றிட வேண்டியதால்
இசைந்து சுவாமியவர்
பந்தமுடன் அதிபரெனும்
பதவிதனில் அமர்ந்தாங்கு
செந்தமிழ் புகழுடையச்
செய்தார் சேவையென்னே.

ஆரிய திராவிட பாசாவிருத்திச் சங்கப் புனருத்தாரணம்.

அப்போது யாழ்நகரில்
அமைந்திருந்த சங்கம்
ஆரிய திராவிடமாம்
பாசா விருத்திசெய்ய
எப்போதும் நலிதல்கண்டு
ஏங்கிமனம் புழுங்கி
ஒப்பிலா தோங்குதற்கு
உரியவழி கண்டறிந்தார்.

சீர்குலைந்த சங்கத்தைச்
சீர்திருத்தம் செய்து
பார்போற்றும் பண்டிதப்
பரீட்சைகளை நடாத்தி
ஆர்வமுடன் அச்சபையில்
அவருமொரு உறுப்பினராய்
ஆற்றிய பணிநூற்றில்
அதிகமெனச் சாற்றுவரே.

தமிழ்ப் பண்டிதர்கள் உருவாகினர்.

போற்றியது தமிழரினம்
புலவர்குழாம் உருவாக
மாற்றில்லாத் தங்கமன
மயில்வாகனர் செய்தபணி
தோற்றுவித்த பண்டிதர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொகையோ அளவிலதே.

வாழ்க்கையில் மாறுதல்.

இந்துக் கல்லூரியின்
முகாமைப் பொறுப்பாளர்
எல்லோரின் நெஞ்சினிலும்
குடிவாழ்ந்த சீலர்
செந்தமிழின் அரும்புதல்வன்
திருவிளங்கன் என்பார்
பந்தமறுத் திறைவனடி
பரஞ்சென்ற ததனுல்
சிந்தைநொந்த மயில்வாகனச்
செம்மல் வாழ்வினிலும்
பந்தமறும் ஏகாந்தப்
பரத்தார்வம் பொங்க
சென்னை ஸ்ரீராம கிருஷ்ணமிசன்
செய்யும் நற்பணியின்
சேவைக்கே தன்வாழ்வை
அர்ப்பணித்து விட்டார்.

துறவு நிலை.

இருபடகிற் கால்வைத்து
இடறி விழாமல்
ஒருபடகில் காலூன்ற
உறுதியுள்ளங் கொண்டு
துறவறத்தைத் தேர்ந்தெடுத்து
தூயபணி செய்ய
உளந்தெளிந்து அதற்காக
உயர் மயிலாப்பூரின்
மடாலயத்திற் சேர்ந்து
மயில்வாகனென் பெயரை
துறவறத்தாற் துணித்துத்
துறவியாக வாழ்ந்தார்.

அங்கிருந்த காலத்தில்
அரியபல பேருரையும்
சங்கத்தமிழ் வளர்ச்சிக்கு
சார்ந்த பணிபலவும்
பல்ஞான அறிவுரையும்
தந்துதமிழ் உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநிமிர வைத்தார்.

மயில்வாகனனார் பிரபோத சைதன்யப் பெயர்பூண்டார்.

விஞ்ஞான சாத்திரமும்
விநோதகலைச் சொல்லமைப்பும்
தன்ஞானத் தாலுணர்ந்து
தகையுறவே படைத்தச்சில்
அன்று வெளிவந்தபல
அழகுதமிழ் ஏடுகளில்
நன்றுநன்றென்று தமிழறிஞர்
நயந்திடவே வெளியிட்டார்.

அண்டமெல்லாம் புகழ்பரவ
அடிகளவர் ஆற்றுகின்ற
தொண்டுகள் சீர் தூக்கி
தூயஸ்ரீ இராமகிருஷ்ண
மண்டலத்தார் மயில்வாகன்
மன்னுபெயர் தனைநீக்கி
பிரபோத சைதன்யப்
பெரும்பட்டந் தானளித்து
மரியாதை செய்தார்கள்
மகிழ்ச்சிமிகக் கொண்டார்கள்.

டாக்டர் உ,வே.சாமிநாத ஐயருடன் உறவு.

சுவாமிகளும் இங்கிருந்து
சொல்லொணாச் சேவைசெய்து
தமிழ்த்தாத்தா எனப்புகழும்
தமிழறிஞர் உவே
சுவாமிநாத ஐயருடன்
சுவைத்தமிழால் நட்பானார்.

பத்திரிகை ஆசிரியப் பணி.

தமிழ்த்திங்கள் ஏடான
இராமகிருஷ்ண விசயம்
அமிழ்தினிலும் சுவையாக
அமைத்து வெளியிட்டார்
தமிழேட்டின் ஆசிரியன்
தானென்ற போதினிலும்
தமிழணங்கை மற்றோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுதுபோற்ற
ஆதங்கம் மிகக்கொண்டு
அடிகளார் மென்மேலும்
வேதாந்த கேசரியை
வெளியிட்டார் ஆங்கிலத்தில்.

யோகி சுத்தானந்த பாரதியார் நட்பு.

தாமியற்றி வந்தபல கவிதைகளைத்
தரம்பார்க்கச் சுவாமியிடம் யோகியாரும்
நாவினிக்க நயங்கூற வெண்டுமென்று
நட்புடனே நீட்டிடுவார். அதனைத் திருத்தி
அடிகளார் கொடுக்கையிலே ஆர்வமுற்று
"ச்சா" என்ன புலமையென ஆச்சரியப்பட்டால்
யோகியவர் துள்ளிடுவார். இவ்வாறெல்லாம்
சுத்தானந்த பாரதியும் சுவாமியாரும்
முத்தமிழின் இன்பத்திலே மூழ்கலானார்.

மதுரைச் சங்கப் பரீட்சகரானார்.

கவியோகி யோடுநல்ல தொடர்புவைத்துக்
கவிதைகளின் இலக்கணத்தை கற்றுத்தந்து
புவிவாழ்ந்த போதினிலே மதுரைத்தமிழ்
போற்றிவளர் சங்கத்தார் புகழ்ந்து சங்க
புத்தவையில் உறுப்பினராய் சேர்த்ததன்றி
காத்திரமாய் இலக்கியச் சபையின்மூலம்
பணிசெய்யப் பண்டிதப் பரீட்சைக் கன்னர்
பரீட்சகராய் இருந்ததுவும் இது நாளன்றே.

தமிழியல் வானின் தாரகையானார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் மாதந்தோறும்
மலரவைத்த செந்தமிழ் என்னுமேட்டில்
மதுரமாய் சுவாமியவர் எழுதிவைத்த
மணியான இலக்கியக் கட்டுரைகள்
விதம்விதமாய் வெளிவந்த போதறிஞர்
வெகுவாகப் பாராட்டி வியந்தே போனார்.
இதுவெல்லாம் நமதீழப் பெருமைதன்னை
இகமெல்லாம் வெளிக்காட்டி நின்றதம்மா
இன்தமிழுஞ் செழிப்புற்று வளர்ந்ததம்மா
இயலிசையும் நாடகமும் ஓங்கிற்றம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விபுலானந்த அடிகளானுர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து
இருபத்து நான்காம்
ஆண்டினிலே சித்திரைப்
பௌர்ணமி நாளில்
பார்போற்றும் வித்தகர்க்கு
விபுலா லனந்தரென்று
நாமகரணந் தனையீந்தார்
நற்துறவி சர்வானந்தர்.

தீட்சைபெற்ற பின்னரவர்
திகழும் உயர்நாமம்
மாட்சியுற முன்னரவர்
மலர்ந்த திருநாமம்
பிரயோத சைதன்யர்
என்றபேரும் ஈன்றூர்
பெருமையுற அழைத்த
மயில்வாகனப் பேரும்
அன்றிருந்தே படிப்படியாய்
அகன்றுமே போக
ஆகினுர் சுவாமி
விபுலானந்த ராக,
நாமமதே நாளடைவில்
நானிலத்தில் நிலைத்துப்
புகழ் ஈட்டிற்றம்மே.

### அடிகளார் இந்தியாவிலிருந்து இலங்கை வருதல்.

இந்தியாவில் தங்கிவாழ்ந்த
எங்கள்விபுலானந்தரை
சொந்தநாட்டு மக்கள் காணச்
சோட்டைமிகக் கொண்டார்.
அன்பான அழைப்பிதனை
அடிக ளேற்றுவந்து
கண்டிமா நகரம்மற்று
காலிமாத்தனை யெல்லாம்
சென்றவர் கருத்துமிக்கச்
செந்தமிழ் சொற்பெருக்கி
அங்கேயே சிறிதுகாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பணி ஆற்றலானார்.

இலங்கையிற் கல்வித் தொண்டு.

இலங்கையிற் தங்கிவாழ்ந்த
இந்தநாட்களிலே சுவாமி - கல்வி
துலங்கிட ஊருராகத்
தொண்டுகள் பலபுரிந்தார்.
வடக்கிலும் கிழக்கிலுமாய்
விபுலானந்தர் அன்று
தொடக்கிவைத்த கல்விச்
சாலைகள் பலவேயாகும்.

விவேகானந்த சபைவேருன்றி
இருந்தகாலம் அதன்
விவேகத்தால் கிழக்கிலெங்கும்
விரிந்தன கல்விக்கூடம்.
இவைகளைப் பராமரிக்கும்
இணையில்லாப் பொறுப்பேற்று
சபையாரின் மதிப்பைப்
பெற்று சரித்திரம் படைக்கலானார்.

ஈழத்துக் கிழக்கில் கல்வியகங்களை அமைத்தார்.

மீன்பாடுந் தேனாட்டில்
மேலான சிவானந்தா
மேன்மையுறக் காரைதீவில்
மிளிர்கின்ற சாரதா
தோன்றுதற்குப் பாடுபட்ட
தொண்டரெங்கள் சுவாமி
காண்பதற்கு என்னதவஞ்
செய்ததிந்தப் பூமி.

திருகோணமலை கொழும்பு யாழ்ப்பாணத்தில்
மீன்பாடுத் தேனாட்டில்
எங்கிலுமே மிசனரிமார்
உருவாக்கி வைத்த கல்விக் கூடமெல்லாம்
உயர்வதற்குச் சுவாமி விபுலானந்தர் பட்ட
பெரும்பாடு கல்வியின்மேல் அவர்க்கிருந்த
பெருமதிப்பை உணர்த்திடுமே. அடிகளாரின்
அரவணைப்பில் கல்வி கலை சமயமெல்லாம்
அன்றுபுகழ் பெற்றதென்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கத்தா இராமக் கிருஷ்ணமிசன் மாநாட்டில்
மதிப்புப் பெற்ருர்.

கல்கத்தா வேலூரில் அமைந்திருந்த
கண்போன்ற இராமக்கிருஷ்ண மடத்தில்
நல்லறிஞர் நடாத்திவைத்த மாநாட்டிற்கு
நம்நாட்டின் பிரதி நிதியாகச் சென்று
நல்லுரைகள் ஆற்றிமிக மாட்சிபெற்ருர்.

அநாதை மாணவர்களுக்கு ஆதரவீந்தார்.

மாட்சியுடன் இலங்கைவந்து
மனவோய்வுகொண்டு
நாட்கள்சில கழியுமுன்பே வைத்தீசுவரா
கல்லூரியதன் சார்பில் அநாதைச் சிருர்
கற்பதற்கும் ஓரில்லம் கட்டிவைத்தார்.

ஆங்கிலக் கல்வி கற்க வசதி செய்தார்.

ஆங்கிலேய நாகரீகப் புயலடித்து
ஆக்கிரமித்தே கிழக்கை அசைத்தபோது
தாங்கிடவே முடியாத துயரங்கொண்டு
தன்னலத்தைப் பாராது சுவாமியிவர்
பாங்காகப் பண்புடனே மக்கள்வாழப்
படித்தறிவு பெற்றுய்து உயர்ச்சிகாண
ஆங்கிலமும் செந்தமிழும் படித்துத்தேற
இலவசமாய் விடுதிகளும் ஆக்கினரே.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தோற்றத்தில்
அடிகளாரின் பங்கு.

தான்பிறந்த மண்ணிலன்றிச் சுவாமிசென்ற
தமிழ்நாட்டிற் பல்கலையும் வளர்வதற்கு
வான்உயர்ந்த உள்ளத்தால் வாஞ்சையோடு
வள்ளலாகச் சென்னையிலே அமைந்திருக்கும்
பூந்தமிழின் இசைகேட்கும் அண்ணுமலைப்
பொங்குபுகழ்ச் செட்டியார் ஆக்கிவைத்த
பாங்குறு பல்கழக் கழகத்தை அந்தநாளில்
பலபணியும் யோசனையுஞ் சொல்லிவைத்து
தோன்றவைத்த பெருமை எங்கள் முத்தமிழில்
துறைபோன சுவாமியவர் பணிக்கே சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காந்தியடிகளை வரவேற்றார்.

மதுரைமீண்டு வந்தவுடன் அடிகளார்தம்
மட்டுநகர் கல்லடியில் அமைத்து வைத்த
புதுமைபெறு சிவானந்தப் பாடசாலை
பொறுப்புகளில் ஈடுபட்டு உழைத்தவேளை
கதரணிந்து இலங்கைக்கு விசயஞ்செய்த
காந்திமகான் அவர்களைநம் அடிகளாரே
முதன்முதலில் மாநாட்டுத் தலைவ ரென்ற
முறையினிலே வரவேற்று வாழ்த்தினரே.

### தமிழ்ப் புலவர் வகுப்புகள்.

உயர்ந்ததமிழ் இலக்கிய இலக்கணத்தை
ஒவ்வொரு தமிழ்மகனும் அறிய வேண்டும்
அயராது அதைப்படித்துப் புலமைமிக்க
ஆசானாய் மிளிர்ந்திடவே வேண்டுமென்று
நயமாகப் புலவர்வகுப் பொன்றை வைத்து
நடத்தியது மட்டுமல்ல தமிழைமுற்றாய்
பயனுறக் கற்பதற்குச் சமக்கிருதம்
பயன்படு மென்றதையும் படிக்க வைத்தார்.

### சமய சமரசச் சொற்பொழிவுகள்

கிறித்தவம் இந்துமதம் பௌத்தம் இஸ்லாம்
காட்டுவது சமசரமே என்றுசொல்லி
நெறிதவறு தடிகள்தினம் சமயம்பற்றி
நீள்நேரம் சொற்பெருக்கு நிகழ்த்தி மற்றும்
குறிதவறாது மக்கள் வாழ்வதற்காய்
காந்தீயம் இராமக்கிருஷ்ண உபதேசங்கள்
அறிவூட்டும் பிறகருத்தும் ஊட்டியன்று
அடிகளார் ஆற்றிவந்த பணிகள் கோடி.

### அண்ணாமலைப் பல்கலைக்கழக அழைப்பு.

முத்தமிழ் வித்தகராய்
மூவுலகும் உணர்ந்தவராய்
வித்துவச் செருக்கில்லாமல்
விளங்கிய அடிகளாரை
மெத்தவே விருப்புக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான ஆசிகூறி
மற்றோரை மறந்து அண்ணா
மலைச்செட்டி யாரவர்கள்
வித்தகா வருகவென்று
விநயமாய் அழைத்துநின்றார்.

செட்டியார் அழைப்பைச் சாமி
சிந்தையில் ஏற்றுக்கொண்டு
தட்டிட மார்க்கமின்றி
தமிழ்ப்பணி மனத்திறேடு
மட்டக் களப்பை விட்டு
மதுரைக்குப் பயணமாகி
தொட்டபணி துலங்கத்
தொடர்ந்தார் நற்சேவையதை.

முதற்தமிழ்ப் பேராசான்.

தமிழ்நாட்டில் முதலிற்
தமிழ்ப்பே ராசானுக
தமிழ்கூறும் உலகமெலாம்
தமதாக்கிக்கொண்டார்சாமி.

தீண்டாமை போக்கித் திகழ்ந்தார்.

பேரா சிரியராகப் பெரும்பணி ஆற்றும்போது
தீராத கொடுமையாலே தீண்டப்படாதார் துன்பம்
நேர அவர்கள்படும் நீஷ்டூரந் தனை உணர்ந்து
ஆறமனம் அவர்கள் அறிவு வளர்ச்சியுற
தீராத முயற்சியினால் திறந்தார் இராப்பள்ளி.

தீண்டப் படாதோரும் தேவனின் பிள்ளைகளே
ஈண்டு அவர்களுக்கேன் இழிவுநிலை என்றுரைத்து
வேண்டும் உதவிகளை விபுலானந்த அடிகள்
ஆண்டு பலவாக அளித்து மகிழ்ந்தார்கள்.

இசையாராய்ச்சி.

இசைபற்றி ஆராய்ந்து
எழுதிய கட்டுரைகள்
பசுமையாய் மனதில்வாழும்
பாங்கான பேருரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையெட்டும் பரவக் ஹிந்து
தின ஏட்டில் மட்டுமல்ல
விசைகொண்டு வானொலியில்
விபரமாய் வெளியாயிற்று.

உள்ளத்தின் ஆறுதற்காய்
பேராசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

பல்கலைக் கழகந் தன்னில்
பலகாலஞ் சேவைசெய்து
உள்ளத்திற் கோய்வு வேண்டி
உதறினார் பதவிதன்னை.

தமிழ்த்தாய்க்கு யாழ்நூல் தந்தார்.

அந்தநாள் தொடங்கியெங்கள்
அடிகளார் இசையில் நாட்டம்
கொண்டதால் யாழ்நூல் தன்னைக்
கண்டது இந்தநாடே.

கரந்தைத் தமிழ்ச்சங்கக்
காவலர் தொடர்பினாலே
நிரந்தர மானமாண்பு
நிலைக்க அடிகளாரும்
சுரந்த இசைஞானச்
சோதியில் கட்டுண்டு
ஆராய்ந்து ஆதிப் பண்கள்
அநேகமாய் கண்டு தேர்ந்து
சிறந்த இசைநூலை
செந்தமிழ்த் தாய்க்களித்தார்.

பத்திரிகையாசிரியப் பணி செய்தார்.

ஆங்கிலந் தமிழ்மொழியில்
அந்தநாள் வெளிவந்த
பாங்கான இதழ்களுக்குப்
பத்திரிகை ஆசிரியனாய்
நீண்டநாள் இருந்துநல்ல
நிறைவான கருத்துகளை
வேண்டுமட்டுந் தந்துதமிழ்
விருந்தளித்தார் வித்தகனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயமலைச் சாரலில் பிரபுத்த பாரத
இதழின் பதிப்பு ஆசிரியரானுர்.

பிரபுத்த பாரதமாய்ப்
பெயர்தாங்கி வெளிவந்த
பிரபல சஞ்சிகைக்குப்
பதிப்பாசி ரியனுயமர்ந்து
பணியாற்ற இமயத்தில்
பக்கலுள்ள சாரலினைத்
தரிசிக்கும் சந்தர்ப்பம் நம்
தமிழ்முனிக்குக் கிட்டியதே.

பிரபுத்த பாரத இதழிற் தமிழமுது அளித்தார்.

மாயாவதி ஆச்சிரமம்
மகிழ்வோடு இவரை ஏற்கத்
தாய்பிள்ளை போலிருந்து
தவநெறியிற் பணிசெய்தார்.
ஆங்கிலச் சஞ்சிகையாய்
அவர்நடாத்தி வெளியிட்ட
பாங்கான பிரபுத்த
பத்திரிகையிற் தமிழ்மொழியில்
நீங்காமல் நினைவில் நிற்கும்
நல்ல அருங்கருத்தை
தாங்கிய பாடல்களைத்
தக்கபடி மொழிபெயர்த்து
மாங்கனிச் சாறெனவே
மற்றவருஞ் சுவைப்பதற்கு
சாமியிவர் செய்ததொண்டை
செந்தமிழ்த்தாய் மறப்பாளா.

வடநாடிருந்து தென்னகம் வந்து சேர்தல்.

இமயமலைச் சாரலிலே
இன்புற்று மீண்டுமவர்
தமிழ்நாடு வந்துசும்மா
தரியாமல் தமிழ்மொழிக்கும்
சமயத்தின் உயர்வதற்குஞ்
சதாகாலந் தொண்டாற்றி
அமைதியுறு வேளையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளாரை இலங்கைக்கு
வருமாறு அழைப்புவர
வந்தார். அவர்வரவை
இருந்தமிழ் தாய்பார்த்து
இன்னுமொர் பணிகொடுத்தாள்.

இலங்கைப் பல்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்.

ஈழத்தில் அமைந்திருந்த
ஈடில்லாச் சர்வகலா
சாலையிலே தமிழ்த்துறைக்கு
சரியான தகுதிபெற்ற
ஆளில்லை என்பதனால்
அந்த இடமதற்கு
யாழ்நூலின் வித்தகரை
யாசித்தார் அறிஞர்பலர்.
காலத்தின் தேவைதனைக்
கண்டுகொண்ட சுவாமியவர்
சாலப் பொருத்தமென்று
சம்மதித்து ஏற்றிட்டார்.

யாழ்நூல் அரங்கேற்று விழா.

இன்னிசையில் வல்லவனும்
இராவணன் பிறந்தநாட்டில்
இன்னுமோர் இசைவல்லோன்
எழுந்தனன் கிழக்குமண்ணில்

எங்கும் விழாக்கோலம்
இசையின் புதுக்கோலம்
பொங்குந் தமிழ்மாதா
பூரித்தாள் விழாக்கண்டு
புலவர்கள் இசையில்வல்ல
பேரறிஞர் பண்டிதர்கள்
கலையுலகின் காவலர்கள்
களிப்புடனே வந்திருந்தார்.

திருக்கொள்ளம்புத்தூரில் திருவிழா.

பலரும் வியந்திருக்கப்
பண்டிதர்கள் யாழ்நூல்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான கருத்துக்களை
அள்ளியள்ளி வழங்கினார்கள்.

பதினான்கு ஆண்டுகாலம்
பழந்தமிழ் இசையாய்ந்து
புதிதாக யாழ்நூல் தன்னைப்
புவியோர்க்கு அளித்தாரண்ணல்.

திருக்கொள்ளம் பூதூர்தன்னிற்
திருக்கோயில் முன்றலிலே
அருட்திரு அடிகள்நூலை
அரங்கேற்றஞ் செய்துவைத்தார்.

மங்கள நன்நாளில்
மனம்நிறை வானவிழா
எங்கள் சுவாமிக்கு
இசைத்தமிழ்த்தாய் எடுத்தாளோ.

விஞ்ஞானத் தமிழ்க் கலைச்சொற்கள்.

இந்த இசைநூலை இயற்றித் தருமுன்னால்
விந்தைப் பிறவியிறை விரிந்த அறிவூட்டும்
செந்தமிழ்க் கலைச்சொற்கள்
சேர்த்து வெளியிட்டார்
அந்த அளவோடு ஆறி அமர்ந்தாரா
பந்தங்கள் பாசத்தைப் பைய மறந்தாலும்
செந்தமிழ்த் தொண்டையவர்
சிந்தை மறந்ததில்லை.

மதங்கசூழாமணி படைத்து நாடகத் தமிழில்லை
என்ற குறையைப் போக்கினார்.

சேக்ஸ்பியரின் நாடகத்தைத்
தேர்ந்து தமிழாக்கி
நோக்கமுள்ள வடமொழியின்
நுட்பங்களை ஒன்றாக்கி
ஆக்கமென மதங்கர்சூழா
மணியெனும் நாடகநூல்
நீக்கமறச் மதுரையின்
நெறியவையில் அரங்கேற்றி வைத்தவரை
நெஞ்சுள்ள வரைமறவோம் மறவோமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்கொண்டார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் - தமிழ்
காப்பவரின் யாழ்நூலை
அரங்கேற்றம் செய்தபின்னல் - சுவாமி
அங்கிருந்து திரும்பிவந்தார்
வந்ததும் வந்தார் நோயை - அவர்
வரும்போதே கூட்டிவந்தார்
நொந்தது அவருடலம் - சுரம்
நோயவரை வாட்டிற்றே
எந்நாளுந் தமிழ்வாழ - எங்கும்
இசைவாழ உழைத்தமகான்
பலநாள் தமிழ்செய்து - வாழப்
பரமனவர் விரும்பவில்லை.

விபுலானந்த அடிகளார் அரனடி சேர்ந்தார்.

ஆயிரத்துத் தொழாயிரத்து
நாற்பத்தேழாம் ஆண்டு
ஆடிமாதம் பத்தொன்பதில்
அடிகளாரின் நோய்முற்றி
அரனடியைச் சேர்ந்திட்டார்
அழுதது தமிழுலகம்.

ஆற்ருத் துயரம் அலைமோதிற்று.

தரமான தமிழ்மகனைத்
தானிழந்து போனதினுல்
வரண்டது தமிழ்நாடு
வாய்விட்டு அழுதார்கள்
சேய்பிரிந்த துயரம்போல்
சேல்விழியார் துடித்தார்கள்
செந்தமிழ்த்தாய் விட்டகண்ணீர்
செகமெல்லாம் பரந்ததம்மா.

நிறைவு.

கவிஞனைய்க் கலைஞனை விஞ்ஞானத்தில்
கரைகண்ட ஞானியாய்த் துறவியாக
புவிபோற்றும் பண்டிதனைய்ப் புலவனைய்
போர்வீரன் பத்திரிகை ஆசானைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிசொட்டும் பேச்சாளனைச் சமயங்காத்த
காவலனாய் பேராசிரியனைக
இனியொருவர் இவரைப்போல்
இப்புவியில் பிறப்பாராமோ
எங்கள் விபுலானந்தர் புகழ்தன்னைக்
இனிமேற் கொள்வார் யாரோ
பொங்குமடி யார்புகழோ
புவியுள்ள மட்டும்
மங்காது ஒளிருமென மனமே ஆறியிரு.

------290781 செவ் இர 1200-----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா - தொரன்ரோ

# றிப்ளக்ஸ் அச்சகத்தார்

## மின்கணனித் தமிழ் அச்சமைப்பில் அச்சிட்டு வெளியிட்ட

## தமிழ் நூல்கள்

-------------

### கிரேக்க இலக்கியங்களின் தமிழாக்கம்.

1. ஹோமர் மகா கவியின் - ஓடிஸ்சி காவியம்
2. ஹோமர் மகா கவியின் - இலியட் காவியம்
3. அயிசிலியன் நாடகங்கள் - 2 தொகுதிகள்
4. யூரிப்பைடசின் நாடகங்கள் - 5 தொகுதிகள்
5. அஸ்ரபானின் நாடகங்கள் - 4 தொகுதிகள்
7. மண்டேரின் நாடகங்கள் - 1 தொகுதி.
8. சொப்கொக்கில்சின் நாடகங்கள் - 2 தொகுதிகள்

### கிறித்தவ நூல்கள்:

1. இயேசு புராணம்
2. பெத்தலேகங் கலம்பகம்.
3. வேதாகமத்திற் தாபரங்கள்.
4. பெத்தலேகம் குறவஞ்சி - உரை

### காவியங்கள்

1. தமிழழகி ஒன்பது காண்டங்களுள் முதல் மூன்று காண்டங்கள்
2. கைக்கிளையம்.
3. மல்லிகைப் பந்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அன்புடைத் தமிழர் அகத்திணை வாழ்க்கை
5. பூவரசம் மரத்தடி.

## நூற்திரட்டுகள்:

1. ஈழத்துப் பூராடனாரின் நூற்திரட்டுகள்
   1ந் தொகுதி
   2ந் தொகுதி
   3ந் தொகுதி
   4ந் தொகுதி
2. கணபதிப்பிள்ளைப் புலவர் நூற்திரட்டு 1ந் தொகுதி

## தமிழியல் நூல்கள்:

1. பேனா முனையிலிருந்து
2. தமிழ் எழுத்து உறுப்பிலக்கணம்
3. மின்கணனித் தமிழும் எழுத்துச் சீர்திருத்தமும்
4. தமிழ் எழுத்துச் சீர்திருத்தச் சிந்தனைகள்

## நாடகத் தமிழ் இலக்கணம்:

1. கூத்தர் வெண்பா
2. கூத்துநூல் விருத்தம்

## மற்றும்.

1. இளமைப் பருவச் சிந்தனைகள்
2. தமிழ்த்தாய் பள்ளியெழுச்சி
3. அச்சுக்கலையில் மின்கணனிப் பிரவேசம்
4. உலகத் தமிழ்ப் பண்பாட்டியல்
5. புதிய புறத்திணை நூற்றொன்று
7. புதிய அகத்திணை நூற்றிரண்டு

-----------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்நூல் வித்தகர்
# விபுலானந்த அடிகளார்
## பிறந்த நாடு

-----------

வங்கக் கடலின் வளைகுடா கிழக்காய்
பொங்கும் வரைகள் பொலியும் மேற்காய்
நீரரர் நாடெனும் நிலமகள் மட்டுக்
களப்பெனும் பண்டைப் பழம்பதி ஒன்று
அளப்பெரும் இலங்கை அழகிய நித்திலத்
தீவதில் திகழும் திருப்பதி உண்டதின்
பாவமும் எழிலும் பண்டைப் புகழும்
நாவது கொண்டு நவில்வதும் இன்பமே
தேனும் பாலுங் திரண்டு கூட
மானும் கயலும் மருண்டு ஓட
மீனுரு நீரரர் மெல்லிசை பாட
வானும் கடலும் வளஞ்செய் நாடது
இத்தகை மானிலத் தெழில்வயல் சூழும்
முத்தமிழ் இணைந்த முதுதமிழ் வாழும்
காரை தீவெனும் கவின்பதி தனிலே
பாரைத் துறப்பினும் பைந்தமிழ் துறவா
பாவலன் யாழ்செய் பண்ணிசைப் புலவன்
நாவலன் நாடக நற்தமிழ் வல்லோன்
ஆங்கில மொழியின் அடிமுடி கண்டோன்
தேங்கிடு கலைபல தேறிய தேசிகன்
ஆணவம் மாயை ஆம்மும் மலத்தை
மாணவே வென்ற மாமுனி சுவாமி
விபுலா னந்த வித்தக அடிகள்
தவத்திரு பிறந்து தமிழ்செய் தனனே

----------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org